**செய்தி வெளியீடு எண். 893** **நாள்.22.10.2008**

**செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கான வாகனங்களை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் வழங்கினார்**

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் 2008–2009 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவள்ளூர், திருவாரூர் ஆகிய மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு (டெம்போ டிராவலர்) ஏழு வீடியோ வாகனங்கள் ரூ.40,74,092/– மதிப்பிலும், காஞ்சிபுரம், செய்தி வெளியீட்டுப் பிரிவு (தலைமையிடம்) ஆகிய அலுவலகங்களுக்கு இரண்டு டெம்போ டிராக்ஸ் ஜூடோ ரூ.8,72,069/– ஆக 9 வாகனங்களுக்கு ரூ.49,46,161/– மதிப்பில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று (22.10.2008) தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது. இவ்வாகனங்களை, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவள்ளூர், திருவாரூர் ஆகிய மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு எஸ்.கண்ணதாசன், திரு எம்.அசோகன், திரு எல்.கிரிராஜன், திரு கே.கண்ணதாசன், திரு டி.மருதபிள்ளை, திரு எம்.பி.ராஜா, திரு கே.முத்துசாமி ஆகியோர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியின் போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு சிவாஜி அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.